## திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்போம் என பகைவர் எழுப்பும் கூச்சல்

# வேங்கைகள் உலவுகின்ற கானகத்தில் குள்ளநரிகள் போடும் ஊளைச் சத்தம்!

## காஞ்சி தி.மு.க. பவள விழா பொதுக்கூட்டத்தில் வைகோ பேச்சு!

**காஞ்சி, அக்.2 -**

**“தி.மு. கழகத்தை அழிப்போம் என பகைவர் எழுப்பும் கூச்சல் வேங்கைகள் உலவுகின்ற கானகத்தில் குள்ளநரிகள் போடும் ஊளைச்சத்தம்” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் காஞ்சியில் நடைபெற்ற கழக பவள விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவள விழா பொதுக்கூட்டம், 28.09.2024 சனிக்கிழமை, காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. இதில் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

கதிர்வெடித்துப் பிளம்பு விழ
கடல் கொதித்துச் சூடாற்ற
முழுமைமிகு நிலப்பரப்பின்
முதற் பிறப்புத் தோன்றிவிட
நதி வருமுன் மணல் தருமுன்
முன்தோன்றி மூத்ததுவும்

சூரிய சந்திரர்கள் இருக்கின்ற வரை, வானவெளியில் நட்சத்திரங்கள் இருக்கின்ற வரை, ஓடுகின்ற நதிகள் இருக்கின்ற வரை, இந்த விண்ணும் மண்ணும் இருக்கும் வரை ஆயிரம் ஆயிரம் காலத்துப் பயிராக தமிழ் மொழி செம்மொழியாக நிலைத்து நிற்கும் என்பதனால் தன் எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் செந்தமிழ் மொழிக்குப் பொன்மகுடம் சூட்டிய பேறறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆவது வருடத்தில் பவள விழாவை வீரம் தழைத்த காஞ்சியில். மகேந்திரவர்மனும், நரசிம்ம வர்மனும் வாள் வீசிய காஞ்சியில், நாமார்க்கும் குடியல்லோம்; நரகத்தில் இடர்படோம்; நமனை அஞ்சோம் என்று திருநாவுக்கரசர் அரசவையில் முழங்கிய காஞ்சியில் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம்

அறிஞர் அண்ணா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, டாக்டர் கலைஞர் அவர்களால் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஆருயிர் சகோதரர் தளபதி ஸ்டாலின் அவர்களின் தோள்களில் வீற்றிருக்கின்றது. கோடானு கோடி தமிழர்கள் இதயத்தில் நமது முதலமைச்சர் இன்று வீற்றிருக்கின்றார். இந்தப் பவள விழாவில் அவர் சிறப்புரை ஆற்ற இருக்கின்றார்.

இந்த விழாவுக்கு எனது அருமை நண்பர் நீர்வளத் துறை அமைச்சர் சகோதரர் துரை முருகன் தலைமை தாங்குகிறார். கழகத்தின் பொருளாளர் எனது ஆருயிர் சகோதரர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் காவிரி மண்டலத்தைக் கட்டிக் காக்கும் அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்டோர் அமர்ந்திருக்கக் கூடிய இந்த விழாவில், பங்கேற்றிருக்கக் கூடிய இந்திய கூட்டணியின் அங்கங்களாக விளங்கும் கட்சிகளின் தலைவர்களே, இலட்சக்கணக்கில் திரண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்மணிகளே, இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, அமைச்சர் பெருமக்களே, அன்புத் தாய்மார்களே, அருமைப் பெரியோர்களே,

என் இருவிழி மழைதனைக் காணாதீர்; இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

மானம் என் மகன் கேட்ட தாலாட்டு; மரணம் அவன் ஆடிய விளையாட்டு!

என்று சொன்ன கலைஞர் அவர்களின் கவிதை வரிகளை நெஞ்சிலே தாங்கி, இன்றைக்குத் தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது என்ற நிலையில், இந்தப் பவள விழா மாநாட்டில் வந்து கலந்துகொண்டிருக்கக்கூடிய என் உயிரினும் மேலான உடன்பிறப்புக்கள் என்று கலைஞரால் விளிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களே வணக்கம்.

இந்த மிகப்பெரிய பொதுக்கூட்டத்தில் காஞ்சியில் பேசுவதற்கு அனுமதி கொடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

திராவிட இயக்கத்தில், திமுகவை அழித்தால் எல்லாம் அழிந்துபோகும் என்று மனப்பால் குடித்துக்கொண்டு இந்துத்துவா சக்திகளும், சனாதன சக்திகளும் திட்டம் தீட்டுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கத் துடிக்கின்றவர்கள் எழுப்புகின்ற வெற்றுக் கூச்சல் என்பது, வேங்கைகளும், சிங்கங்களும் உலவுகின்ற கானகத்தில் குள்ள நரிகள் எழுப்புகின்ற ஊளைச்சத்தமாகும்.

ஒரு செய்தியை நாட்டுக்குத் தெரிவிக்கின்றோம். மேடையில் இருக்கின்ற தலைவர்கள் உட்பட நாம் 40க்கு 40 வெற்றியைப் பெற்றுக் கொடுத்தோம். அதன் பிறகும் தன்னுடைய எண்ணம் மாறாமல் நரேந்திர மோடியும், அவரது கூட்டமும் நமக்கு விரோதமான கொடுமையான செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அண்ணா அவர்கள் தான் இருக்கும் காலத்திலேயே மூன்று உறுதிகளைக் கூறினார். திருமாவளவன்கூட, “அந்த மூன்று உறுதிகளை யாராலும் மாற்ற முடியாது. நான் மடிந்த பின்னாலும் இதுதான் இருக்கும். இன்றைக்கும் அண்ணாதான் ஆட்சி நடத்துகிறார் என்று அவர்கள் எண்ணிக்கொள்வார்கள்” என கூறினார்.

### பெரியாருக்கு காணிக்கை!

ஆம், 1967 மார்ச் 1ஆம் தேதி பிறந்தது. ராஜாஜி ஹாலில் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி பேரறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராக தேர்ந்தெடுத்தார்கள். மறுநாள் மார்ச் 2 ஆம் தேதி காலையில், அறிஞர் அண்ணா அவர்கள் ஆளுநர் உஜ்ஜல்சிங்கை சந்தித்தார். ஆளுநர் என்றால், இன்றைக்கு இருக்கின்ற கழிசடையைப் போல் அல்ல, அற்புதமான ஆளுநர். அவரைப் பார்த்துவிட்டு வந்தார். 3 ஆம் தேதி, அண்ணா இருந்த காரில் டாக்டர் நாவலர், டாக்டர் கலைஞர், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் உடன் சென்றார்கள். அண்ணா காஞ்சிக்குத்தான் செல்கிறார் என்று எல்லோரும் நினைத்தார்கள். இல்லை. கார் செங்கல்பட்டைத் தாண்டி திருச்சிக்குப் போனது. திருச்சி பெரியார் மாளிகைக்கு முன்பு சென்று நின்றது. தந்தை பெரியாரும், மணியம்மையாரும் உள்ளே இருக்கிறார்கள். அண்ணன் வீரமணி அவர்களும் அவர்களுடன் இருக்கிறார். அருகில் சென்று வணக்கம் சொல்லிக்கொண்டே, “அய்யா நலமாக இருக்கிறீர்களா?” என்று பெரியாரைப் பார்த்து அண்ணா கேட்டார். தலைகுனிந்து கொண்டிருந்த பெரியார் சற்றே நிமிர்ந்து, “நான் நலமாக இருக்கிறேன். நீங்க சௌக்கியமா? நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா?” என்று கேட்டுவிட்டு, நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, இந்த அரசாங்கம் உங்களுக்குக் காணிக்கை என்று அண்ணா சொல்லிவிட்டு வந்தார்.



அய்யா ஏன் சோர்வாகக் காணப்பட்டார் என்று அண்ணா நினைத்துக்கொண்டு வந்தார். ஓரிடத்தில் அதற்கு அய்யா அவர்களே விளக்கம் கொடுத்துவிட்டார். அண்ணா முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு என்னைப் பார்க்க வருகிறார் என்ற பிறகு, எனக்கு கூச்சம் வந்துவிட்டது. திருமணத்தின்போது மணமேடைக்கு மணமகன் வருவது போன்று அண்ணா வந்தார். மணமேடையில் வெட்கப்பட்டு தலைகுனிந்து உட்கார்ந்திருக்கின்ற மனப்பெண் போன்று நான் இருந்தேன் என்று தன்னுடைய மனதிலே இருக்கக்கூடிய உணர்வை பெரியார் கூறினார்.

### ‘நா’ தழுதழுக்கச் சொன்ன பெரியார்!

1968 நவம்பர் 6 ஆம் தேதி, அண்ணா அவர்கள் அமெரிக்காவிலிருந்து சிகிச்சை பெற்று திரும்பிய பிறகு, அவரைச் சந்திக்கச் சென்ற சட்டக் கல்லூரி மாணவர்களில் நானும் ஒருவன். மெலிந்த தோற்றத்தில் இருந்தார். அவரது வீட்டில் சென்று பார்த்தோம்.

1968 நவம்பர் 11 ஆம் தேதி, அண்ணா இருக்கும் இடத்திற்குத் தகவல் வருகிறது. அய்யா பெரியார், மணியம்மையார், வீரமணி, சம்மந்தம் ஆகியோர் உங்களைச் சந்திக்க வருகிறார்கள் என்று அண்ணாவிடம் சொன்னவுடன், பரபரப்பான சூழலில், வீரமணி அவர்களைப் பார்த்து, “நான் வந்து அய்யா அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நீங்கள் முந்திக்கொண்டுவிட்டீர்களே” என்று கூறினார்.

அப்போது பெரியார் அவர்கள் அருகில் அமர்ந்திருந்த அண்ணாவின் இரண்டு கன்னங்களை தனது இரண்டு கைகளாலும் வருடியவாறு (உணர்ச்சிமயமான காட்சி) “நீங்கள் நல்லா இருக்கீங்க. நீங்க சுகமாக இருக்கீங்க. நீங்க சுகமாக இருக்கீங்க என்பதை சொல்லிவிட்டுப் போகத்தான் நான் வந்தேன்” என்று நா தழுதழுக்க உறுதியாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

### என்னை வாழ்த்திய கலைஞர்!

அந்தப் பெரியாரின் இலட்சியக் கனவுகளை மசோதாக்கள், சட்டங்கள் மூலம் நிறைவேற்றினார் டாக்டர் கலைஞர் அவர்கள். திராவிட இயக்கத்துக்கு ஆபத்து என்றால், எங்கள் கட்சி உங்களுக்குத் துணையாக இருப்போம். “பெரியாரும் அண்ணாவும் பிரிந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மை இல்லை. பெரியார் எங்கே இருந்தாலும் அவர் நெஞ்சில் நான் இருப்பேன். நான் எங்கே இருந்தாலும் என் நெஞ்சில் பெரியார் இருப்பார். இது இரண்டு பேருக்கும் தெரிந்த ரகசியம். ஆகவே நான் பெரியாரை பிரியவில்லை” என்று அண்ணா கூறினார்.

நடக்கக்கூடாத விபரீதங்கள் மனித வாழ்க்கையில் நடப்பதுண்டு. அதுபோல என்னுடைய வாழ்விலும் நடந்திருக்கிறது. மாறிச் சென்றிருக்கிறேன். ஆனாலும் திமுக சகோதரர்கள் என் மீது அதே அன்பையும், பாசத்தையும் காட்டுகின்றார்கள். அதற்கு ஆயிரம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1999 இல் நாங்கள் காஞ்சியில் ஒரு மாநாடு நடத்தினோம். அதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் வந்தார்கள். இன்று பெய்ததைப் போல அன்றைக்கும் பெரும் மழை. காஞ்சி முழுவதும் வெள்ளக் காடாக இருந்தது. அன்றைக்கு நான் பேசிய பிறகு, டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது, “இந்தத் தி.மு.கழகத்தை யார் அழிக்க வந்தாலும் வாளெடுப்போம்; வேல் வீசுவோம். நாங்கள் அத்தனை பேரும் மடிந்தால்தான் எங்களைத் தாண்டித்தான் திமுகவின் பக்கம் நீங்கள் செல்ல முடியும் என்று நான் பேசியதைக் குறிப்பிட்டு, எங்கே இருந்தாலும் வாழ்க!” என்று பேசினார்.

கலைஞர் அவர்களுக்கு உடல்நலம் மிகக் குறைந்து, பேச்சு சற்று குறைந்த நேரத்தில், தளபதியாரை நான் விமான நிலையத்தில் பார்த்து, நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைத்துக்கொள்கிறோம். எந்த நிபந்தனையும் இல்லை. மாணவ பருவத்தில் எந்தக் கொள்கைகள் இந்த நெஞ்சத்தில் தாங்கினேனோ, அந்தக் கொள்கைகளுக்காக கடைசி வரை வாழ்ந்தேன் என்று இருக்க வேண்டும். ஆகவே எந்தக் கட்டத்திலும் உங்களோடு இருப்பேன் என்று தெரிவித்தேன்.

### கலைஞரை பார்த்து கண் கலங்கினேன்!

தளபதியார் அவர்கள் என்னை தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் என்னை அழைத்துச் சென்றார். அருகில் சென்றதும், “நம் வைகோ வந்திருக்கிறார்” என்று கூறினார். அவர் கண்கள் கலங்கியதைப் பார்த்து என் கண்களும் கலங்கின. அவர் கரம் பற்றி, “உங்களுக்கு எப்படி நான் மெய்க்காப்பாளனாக இருந்தேனோ, அதைப் போல ஆருயிர் தம்பி தளபதிக்கும் இந்த வைகோ என்றைக்கும் மெய்க் காப்பாளனாக, எதிரிகளின் படைகளை துவம்சம் செய்பவனாக இருப்பேன்” என்று நான் தெரிவித்தேன்.

பாரதிய ஜனதா கட்சி இப்பொழுது கொலை பாதகத்தில் ஈடுபட்டிருக்கிறது. வடநாட்டில் கல்புர்க்கியை போன்ற அறிஞர்களைக் கொன்றது. இசுலாமியர்களைக் கொன்றது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க வேண்டும் என்று இங்கே குரோத மனப்பான்மை கொண்டவரை ராஜ்பவனுக்கு அனுப்பியிருக்கிறது.

ஆலயங்களைக் காட்டி, பக்தி உள்ளவர்களை தங்கள் பக்கம் இழுத்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். நமது அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு ஆயிரக்கணக்கான கோடி கோயில் சொத்துகளை மீட்டெடுத்து வருகிறார். தேவாரம், திருவாசகம் ஒலிக்கட்டும் என்று நாங்கள் சொல்வது பிராமண எதிர்ப்பு வெறியல்ல, தமிழ் மீது கொண்ட காதலால் சொல்கிறோம்.

2022 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேசம் மாநிலம், பிரயாக்நகரில் தர்மசன்சத் என்ற மாநாட்டை ஆர்.எஸ்.எஸ்.ம் இந்துத்துவாவும் சேர்ந்து நடத்தியது. அந்த மாநாட்டில் போடப்பட்ட தீர்மானம் என்ன தெரியுமா? நம் நாட்டின் பெயரை இந்தியா என்று யாரும் சொல்லக் கூடாது. ‘பாரத்’ என்றுதான் சொல்ல வேண்டும். முசுலிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வாக்குரிமை கிடையாது. இனி டெல்லி தலைநகர் அல்ல, வாரணாசிதான் தலைநகரம். வாரணாசிக்குத்தான் நாம் செல்ல வேண்டும். இவை அனைத்தும் மனுதர்ம சாஸ்திரத்திலிருந்தும், வர்ணாசிரம தர்மச் சட்டங்களிலிருந்தும் நாங்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானங்கள் என்று கூறுகிறார்கள்.

நரேந்திர மோடி அவர்களே, சரித்திரத்தை நீங்கள் நேருவைப் போல் படிக்காவிட்டாலும், ஓரளவு படித்திருக்கிறீர்கள். நரேந்திர மோடி என்ன சொல்கிறார், ஒரே நாடு; ஒரே மொழி என்கிறார். உலகத்தில் எங்கே அது வெற்றி பெற்றிருக்கிறது? லெனின் கிராடிலும், ஸ்டாலின் கிராடிலும், ஹிட்லரின் நாஜி படைகளை முறியடித்து வெற்றிபெற்று விரட்டிய கம்யூனிஸ்ட் கட்சியின் செம்படை இருக்கும்போதே, ரஷ்ய மொழிதான் இந்த நாட்டின் மொழி என்றபோது, அது 15 நாடுகளாகச் சிதறிப் போனது. தடுக்க முடிந்ததா?

### அண்ணா கூறியது என்ன?

நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு இந்தியா என்ற நாடு எங்கே இருந்தது? 562 சமஸ்தானங்கள் இருந்தன. பாளையங்கள் இருந்தன. நாடுகள் இருந்தன. இந்தியா என்ற ஒரு நாடு கிடையாது. அப்படிப்பட்ட இந்தியாவைப் பாதுகாக்க இந்த மொழிகளை எல்லாம் அழிப்பேன் என்றால், நாங்கள் எதிர்ப்போம்.

அண்ணா அவர்கள் I belong to the Dravidian stock. I am proud to call myself a Dravidian. நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன். என் தாய்மொழி தமிழ் என்றைக்கு ஆட்சிமொழி ஆகிறதோ அன்றைக்குத்தான் நான் திருப்தி அடைவேன் என்றார்.

நான் இப்பொழுது கூறுகிறேன். உங்களின் எந்த ஆட்சி தமிழ்நாட்டுக்குள் வந்தது. குப்தர்களின் ஆட்சி பொற்காலம் என்றார்கள். சந்திரகுப்த மௌரியர்களின் படைகள் இங்கே எப்படி காலெடுத்து வைக்க முடியவில்லையோ, அதைப்போல குப்தர்களும் காலெடுத்து வைக்க முடியவில்லை. மொகலாயர் ஆட்சியும் தொடக்க காலத்தில் தமிழ்நாட்டுக்குள் நுழையவில்லை. அதே நிலைமை மீண்டும் உருவாகும்.

என் போன்றவர்கள் பேசினால் தேசத் துரோகக் குற்றம் என்று சொல்லலாம். மீண்டும் ஒரு முறை சிறைக்குச் செல்ல வேண்டும் என்று கூறினால், எத்தனையோ முறை சென்றுவிட்டேன். மீண்டும் செல்கிறேன் என்று கூறிவிட்டுச் செல்வேன். ஒரே மொழி என்று நீங்கள் கொண்டுவர நினைப்பீர்களானால் இந்தியாவின் ஒருமைப்பாடு நிலைக்காது. என்னைவிட வேகமாக இளைஞர்கள் வருங்காலத்தில் வருவார்கள்.

திராவிடச் செம்மல் நடேசனாரும், சர் பிட்டி தியாகராயரும், தாரவாட் மாதவன் நாயரும் பதியம் போட்டதை பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் பாதுகாத்து வைத்தார்கள். அதை நாமும் பாதுகாப்போம். ஆபத்து வரும் என்று சொன்னால், தலைகொடுக்கவும் தயாராக இருப்போம்.

என் பொதுவாழ்வு 60 ஆண்டுகள் முடிந்துவிட்டது. இனி எவ்வளவு காலமோ எனக்குத் தெரியாது. ஆனால், கடைசி காலத்தில் நிம்மதியாக இருக்க வேண்டும் என்று சகோதரர் தளபதி ஸ்டாலின் கரங்களைப் பற்றிக்கொண்டு நான் இங்கே வந்திருக்கிறேன்.

வெல்லட்டும்! வெல்லட்டும்! திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லட்டும்!!

வாழ்க! வாழ்க! தந்தை பெரியார் புகழ் வாழ்க!

வாழ்க! வாழ்க! அறிஞர் அண்ணா புகழ் வாழ்க!

வாழ்க! வாழ்க! முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் வாழ்க!

வெல்க தமிழ்! வெல்க திராவிடம்! வெல்க திராவிட முன்னேற்றக் கழகம்.

இவ்வாறு மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் உரையாற்றினார்.




